## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.CC.127/2017**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 2ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.** 10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வி | தொழில் | : மோட்டார் வாக ஆய்வாளர் நிலை-1 |
| கணவர் பெயர் | : கோவிந்தராஜ் | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : |

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் இல்லை. கு,வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுராந்தகம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.09.2015 தேதியன்று செஞ்சி பகுதி அலுவலகத்தில் பணியில் இருந்த போது அனந்தபுரம் காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின்படி TN67 AA0459 என்ற ஸ்பெண்டர்பிளஸ் இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்யப்பட்டதில் வாகனத்தில் ஹாண்டில் பார், முன் சக்கரம், கிராஸ்பார் வளைந்து இருந்தது. வாகனத்தின் போர்க் உடைந்திருந்தது. முன் பக்க இன்டிகேட்டர் இரண்டும் உடைந்து இருந்தது. மேற்படி வாகனத்தில் இயந்திர கோளாறு ஏதும் இல்லை என்று கருத்து தெரிவித்து ஆய்வறிக்கை வழங்கினேன்.

**2.** கடந்த 31.08.2015 தேதியன்று செஞ்சி பகுதி அலுவலகத்தில் பணியில் இருந்த போது காவல் ஆய்வாளர் செஞ்சி அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின்படி TN32 M0860 என்ற டிராக்டரை ஆய்வு செய்யப்பட்டதில் வாகனத்தில் எந்த வித சேதமும் விபத்தினால் ஏற்படவில்லை. மேற்படி வாகனத்தில் இயந்திர கோளாறு ஏதும் இல்லை என்று கருத்து தெரிவித்து ஆய்வறிக்கை வழங்கினேன்.

**(5. 04.09.2015 தேதியிட்ட TN67 AA0459 என்ற ஸ்பெண்டர்பிளஸ் என்ற இருச்சக்கர வாகனத்தின் ஆய்வு அறிக்கை அ.சா.ஆ. 5**
**6. 31.08.2015 தேதியிட்ட TN32 M0860 என்ற டிராக்டர் ஆய்வு அறிக்கை அ.சா.ஆ. 6.ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**குறுக்குவிசாரணை:**

**3.** விபத்தில் சம்மந்தபட்ட டிராக்டரை விபத்து நடந்த தேதியில் இருந்து 10 நாள் கழித்து தான் ஆய்வு செய்துள்ளேன் என்றால் 10 நாள் கழித்து தான் கோரிக்கை மனு தரப்பட்டதின்பேரில் அன்றைய தினம் ஆய்வு செய்தேன். விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை விபத்து நடந்த தேதியில் இருந்து 15 நாள் கழித்து தான் ஆய்வு செய்துள்ளேன் என்றால் 15 நாள் கழித்து தான் கோரிக்கை மனு தரப்பட்டதின்பேரில் அன்றைய தினம் ஆய்வு செய்தேன். இருசக்கர வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். டிராக்டர் ஆய்வு செய்த அறிக்கையில் ஓட்டுனருக்கு உரிமம் இருந்தது என்றால் சரிதான். எங்கு வைத்து ஆய்வு செய்தேன் என்றால் எங்களது அலுவலகத்தில் வைத்துதான் ஆய்வு செய்தோம். இரு வாகனம் நேருக்கு நேர் மோதும்போது இருவாகனத்திற்கும் முன்பக்கத்தில் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. டிராக்டர் முன் பக்கத்தில் எந்த சேதமும் காணப்படவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் 31.08.2015 ல் விசாரித்தார்கள். விபத்தில் ஒரு வாகனத்தின் கலர் மற்றொரு வாகனத்தில் ஒட்டியதை ஆய்வின் போது பார்த்தேனா என்றால் அவ்வாறு தென்படவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதும் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.